



admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்







| Vol: 03 | Issue: 178 | 4 Pages | 26.01.2026 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 178 | 4 பக்கங்கள் | 26.01.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தேறற்கயாரையுந்தேராதுதேர்ந்தபின்**
**தேறுக தேறும் பொருள்**

**விளக்கம்:**
**யாரையும் ஆராயாமல் தெளியக்கூடாது, நன்றாக ஆராய்ந்த பின்னர் அவரிடம் தெளிவாகக் கொள்ளத்தக்க பொருள்களைத் தெளிந்து நம்ப வேண்டும்.**

## கனடா மீது 100 சதவீதம் வரி விதிப்பேன் ; டிரம்ப் மிரட்டல்



வாஷிங்டன், ஜன.26

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் 2வது முறையாக பதவியேற்றது முதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். குறிப்பாக, பல்வேறு நாடுகள் மீது அதிரடியாக வரி விதித்து வருகிறார். அமெரிக்காவின் வரி விதிப்பில் இருந்து தப்பிக்க பல்வேறு நாடுகளும் மாற்று வழியை யோசித்து வருகின்றன. குறிப்பாக, வெவ்வேறு நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகின்றன.

இதனிடையே, சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ள கனடா பேச்சுவார்த்தை நடத்தி வந்தது. பேச்சுவார்த்தையின் முடிவில் வேளாண் பொருட்கள், மின்சார வாகனங்கள் தொடர்பாக சீனாவுடன் கனடா வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண்டது.

இந்நிலையில், கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது 100 சதவீதம் வரி விதிப்பேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார். சீனாவுடனான வர்த்தக ஒப்பந்தத்தை கனடா அமல்படுத்தினால் கனடா மீது 100 சதவீதம் வரி விதிப்பேன் என்று டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார். இந்த மிரட்டலால் கனடா, அமெரிக்கா இடையே வர்த்தகப்போர் புதிய உச்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, டென்மார்க் நாட்டின் அங்கமாக உள்ள கிரீன்லாந்தை கைப்பற்ற டிரம்ப் திட்டமிட்டுள்ளார். கிரீன்லாந்தை அமெரிக்கா கைப்பற்றவில்லையென்றால் சீனா, ரஷியா கைப்பற்றிவிடும் என அவர் கூறி வருகிறார். ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா மற்றும் உலக அமைதிக்கு கிரீன்லாந்து தங்கள் வசம் இருப்பது முக்கியம் என்று டிரம்ப் கூறி வருகிறார். மேலும், இந்த நடவடிக்கைக்கு ஆதரவு அளிக்கவில்லையென்றால் கூடுதல் வரிவிதிப்பேன் என்று ஐரோப்பிய நாடுகளை டிரம்ப் மிரட்டி வருகிறார். டிரம்பின் பேச்சுக்கு ஐரோப்பிய யூனியனில் இடம்பெற்றுள்ள நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா: விமான நிலையத்திற்குள் புகுந்த சொகுசு கார் 6 பேர் காயம்




வாஷிங்டன், ஜன.26

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணம் டெட்ராய்ட் நகரில் சர்வதேச விமான நிலையம் உள்ளது. இந்த விமான நிலையத்தில் இன்று பயணிகள் விமானத்திற்கு காத்திருந்தனர்.

அப்போது விமான நிலையத்திற்கு வேகமாக வந்த சொகுசு கார் திடீரென விமான நிலைய டிக்கெட் கவுண்ட்டருக்குள் புகுந்தது. இந்த சம்பவத்தில் விமான நிலையத்தில் இருந்த 6 பேர் காயமடைந்தனர்.

இதையடுத்து விமான நிலையத்தில் பாதுகாப்புப்பணியில் இருந்த போலீசார், காயமடைந்தவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்தை ஏற்படுத்திய கார் டிரைவரை கைது செய்தனர். அவரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. கைது செய்யப்பட்ட கார் டிரைவரின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

## இந்தியா மீதான வரியை 25 சதவீதம் வரை குறைக்க அமெரிக்கா திட்டம்?

வாஷிங்டன், ஜன.26

அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் இந்தியா, சீனா உள்ளிட்ட 75க்கும் மேற்பட்ட நாடுகள் மீது பரஸ்பர வரிகளை விதித்தார். அமெரிக்கா மீது இந்தியா அதிக வரி விதிப்பதாக கூறி, இந்தியப் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதித்தார். மேலும், ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்தியா மீதான வரியை 50 சதவீதமாக உயர்த்தினார். இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

இந்தியா–அமெரிக்கா இடையே வர்த்தக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கிடையே, ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா கணிசமாகக் குறைத்துள்ளதாகவும், விரைவில் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும் என்றும் டிரம்ப் தெரிவித்தார். இந்த நிலையில், அமெரிக்க நிதித்துறை அமைச்சர் ஸ்காட் பெசென்ட் அளித்த பேட்டியில் கூறியதாவது:

"ரஷிய எண்ணெய் வாங்கியதற்காக இந்தியா மீது கூடுதலாக 25 சதவீத வரி விதித்தோம். தற்போது ரஷிய எண்ணெய் வாங்குவதை இந்தியாவில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்கள் கணிசமாகக் குறைத்துள்ளன. இந்திய சுத்திகரிப்பு நிலையங்களின் ரஷிய எண்ணெய் கொள்முதல் சரிந்துவிட்டது. இது ஒரு வெற்றியாகும். இந்தியா மீதான வரிகள் இன்னும் அமலில் உள்ளன. அவற்றை நீக்குவதற்கு ஒரு வழி இருப்பதாக நான் நினைக்கிறேன்" என்றார். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான தற்போதைய 50 சதவீத வரி, 25 சதவீதமாகக் குறைக்கப்படலாம் என்றும் ஸ்காட் பெசென்ட் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

# கால்பந்து விளையாடியபோது மயங்கி விழுந்து உயிரிழந்த மாணவி: முதல்வர் நிதியுதவி அறிவிப்பு

சென்னை ஜன.29

சேலத்தில் கால்பந்து விளையாடிக்கொண்டு இருந்தபோது மயங்கி விழுந்து உயிரிழந்த மாணவியின் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிதியுதவிவழங்கிடமுதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், சதாசிவபுரம் கிராமம், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் கணினி அறிவியல் முதலாமாண்டு பயின்று வந்த கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் ராயக்கோட்டையைச் சேர்ந்த, திவ்யதர்ஷினி (வயது 17) என்பவர் 23.1.2026 அன்று பிற்பகல் சக மாணவியருடன் கால்பந்து விளையாடிக்கொண்டு இருந்தபோது எதிர்பாராதவிதமாக மயங்கி விழுந்து சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

உயிரிழந்த மாணவி திவ்யதர்ஷினியின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த ஆறுதலைத் தெரிவித்துக்கொள்வதுடன் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னையில் உள்ள லலித் கலா அகாடமியில் ஏழு நாட்கள் நடைபெறும் இயற்கை ஓவியக் கண்காட்சி: நடிகர் சிவக்குமார் தொடங்கி வைத்தார்



சென்னையில் உள்ள லலித் கலா அகாடமியில் ஏழு நாட்கள் நடைபெறும் (சித்திர தேரோட்டம் என்ற தலைப்பில்) இயற்கை ஓவியக் கண்காட்சியினை பிரபல ஓவியரும், அன்னை காமாட்சி இசை கல்லூரியின் முதல்வரும் வெங்கடாசலபதி மற்றும் திரைப்பட நடிகரும் ஓவியக் கலைஞருமான சிவகுமார் துவக்கி வைத்தார்...

புகழ்பெற்ற ஓவியர்கள் வசுமதி, முருகேசன், அன்னபூர்ணா, ரங்கராஜன் கலைஞர்கள் வரைந்த ஓவியங்கள் இந்த கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சியானது 22 ஆம் தேதி துவங்கி 28ஆம் தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும் எனவும் , பொது மக்கள் இதனை இலவசமாக பார்வையிடலாம்..

இதில் ஓவியர்கள் இந்தியாவின் கலாச்சாரம், பெருமைகள் பறைசாற்றும் விதமாக தமிழ்நாட்டில் புகழ் பெற்ற தஞ்சை பெரிய கோவில், மகாகவி பாரதியார், டெல்லியில் உள்ள செங்கோட்டை, பூவிதழ்கள் மரங்கள் செடிகள் வெளியிட்டவற்றை , இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட கலர் பெயிண்டுகள் வைத்து புகைப்படங்கள் வரையப்பட்டுள்ளது.

## தாராபுரம் மதரஸத்துல் முகம்மதியாவில் 25ஆவது வெள்ளி விழா – திருக்குர்ஆன் மனப்பாடம் முடித்த 6 மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது






தாராபுரம் மதரஸத்துல் முகம்மதியாவில் 25ஆவது வெள்ளி விழா – திருக்குர்ஆன் மனப்பாடம் முடித்த 6 மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது!

திருக்குர்ஆன் முழு மனப்பாடம் பயிற்சி முடித்தோர் பட்டமளிப்பு விழா உற்சாகத்தில் நிறைவு – சிறப்பு பரிசுகள், உலகெங்கிலும் இமாமாக சேவை செய்வோர் உருவாகும் எதிர்பார்ப்பு.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம்: தாராபுரம் மத்திய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள மதரஸத்துல் முகம்மதியா அரபி பாடசாலை தனது 25 ஆவது வெள்ளி விழா (Annual Day) கொண்டாடியது. இச்சுற்று பாடசாலை கடந்த 1999 ஆப்பட்டது திறக்கப்பட்டு இஸ்லாமிய மாணவர்களுக்கு திருக்குர்ஆனை முழுமையாக மனம்பாடம்செய்துஒப்புவிக்கும்பயிற்சி மற்றும் அரபிக் கல்வியை வழங்கி வருகிறது.

இந்த ஆண்டு விழாவின் முக்கிய நிகழ்ச்சி திருக்குர்ஆன் முழு மனப்பாடம் முடித்த மாணவர்கள்க்கு பட்டமளிப்பு விழா எனும் நீதி. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பயிற்சி முடித்து தேர்ச்சி பெற்ற மொத்தம் 6 மாணவர்களுக்கு "அல்ஹாபில்" எனப்படும் பட்டத்தை வழங்கப்பட்டது.

இதில் மாணவர்கள் திருக்குர்ஆன் 30 புத்தகங்களை மனப்பாடம் செய்து முடித்தனர் என்பது இஸ்லாமிய சமயத்தில் மிகுந்த பெருமை வாய்ந்த செயல் என குறிப்பிடப்பட்டது.

பட்டம் வழங்கும் நிகழ்ச்சியை பள்ளிவாசல் டிரஸ்ட் தலைவர் டாக்டர் சௌகத் அலி தலைமையில், செயலாளர் ஓய்வு பெற்ற தாசில்தார் லியாகத் அலி, ஹாஜி சிராஜுதீன், என்.ஏ.எச்.சுலைமான், ஹாஜி அப்துல் பாசித், ஓய்வு பெற்ற துணை ஆட்சியர் பீர் ஜாபர் ஆகியோர் முன்னிலையில் நடத்தின. பட்டங்களை ஈரோடு தாவுதியா அரபிக் கல்லூரியின் முதல்வர் அல்ஹாஜ் முகமது யூசுப் வழங்கி மாணவர்களை வாழ்த்தினார்.

அறிவிக்கப்பட்டபடி, இ பட்டம் பெற்ற மாணவர்கள் உலகெங்கிலும் உள்ள பள்ளிவாசல்களிலும் முன்னணி இமாமாக பொறுப்பு ஏற்ற, இறை வணக்கம் வழிபாடு நடத்தும் தகுதியை பெற்றதாகவும் இதில் வலியுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் மேலும் இரு பேராசிரியர்கள்க்கு பாடசாலை மாணவர்களின் சார்பாக சிறப்பு பரிசுகளாக ரூ. 2.50 லட்சம் மதிப்பு வாய்ந்த இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட்டன. இது அவர்களது அர்பித் கல்வி யல் நீண்ட சேவை மற்றும் அர்ப்பணிப்பிற்கான நன்றி உணர்வு என விளக்கப்பட்டது.

படிப்பை முடித்து பட்டம் பெற்ற ஒவ்வொரு மாணவருக்கும் திருக்குர்ஆன் பிரதிகள், சிறப்பு ஆடைகள் மற்றும் பராமரிப்பு பொருட்கள் பரிசாக வழங்கப்பட்டன, இது அவர்களது அடுத்த பயணத்திலும் உதவும் வகையில் ஏற்பாடாக இருந்தது.

இந்த உள்ளூர் விழாவில் ஏராளமான இஸ்லாமிய ஆண்பெண் பொதுமக்கள் கலந்துகொண்டனர், அனைவருக்கும் அசைவ உணவு வழங்கி நிகழ்ச்சி சிறப்பாக நிறைவு பெற்றது. திருக்குர்ஆன் மனனம் செய்த மாணவர்களுக்கு பாராட்டு விழாவில்:

திருக்குர்ஆனை முழுமையாக மனனம் செய்து முடித்த மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பாராட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில், பல ஆண்டுகளாக தொடர்ந்து பயிற்சி பெற்று திருக்குர்ஆனை மனனம் செய்த மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

திருக்குர்ஆன் இஸ்லாமியர்களின் புனித வேதமாகும். அதனை மனனம் செய்வது மிகுந்த பொறுமை, ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்பை தேவைப்படுத்தும் செயலாகும். மாணவர்களின் கடின உழைப்பை சமூக ரீதியாக அங்கீகரித்து, அவர்களின் தன்னம்பிக்கை யை உயர்த்தும் வகையில் இந்த பாராட்டு விழா நடத்தப்பட்டது.

மேலும், இவ்விழா மற்ற மாணவர்களுக்கும் திருக்குர்ஆன் மனனம் பயில ஊக்கம் அளிக்கும் வகையில் அமைந்தது. இஸ்லாமிய கல்வி மரபை பாதுகாத்து, அதை எதிர்கால தலைமுறைகளுக்கு கொண்டு செல்லும் நோக்கமும் இதில் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு துணை நின்ற ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மதரஸா நிர்வாகிகளின் பங்களிப்பும் பாராட்டப்பட்டது. திருக்குர்ஆன் மனனம் செய்தமாணவர்கள் நல்லொழுக்கத்துடன் சமூகத்திற்கு பயனுள்ளதாக வாழ வேண்டும் என்றும் நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்டது.




# தேசிய பெண் குழந்தைகள் தின விழிப்புணர்வு பேரணி மாவட்ட கலெக்டர் கொடியசைத்து துவக்கி வைத்தார்

புதுக்கோட்டை, ஜன.25

புதுக்கோட்டை மாவட்டம்ஃ மாநகராட்சி, இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், தேசிய பெண் குழந்தைகள் தினத்தினை முன்னிட்டு, பெண் குழந்தைகளுக்கான திட்டங்கள், சட்டங்கள் மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு பேரணியினை, மாவட்ட கலெக்டர் மு.அருணா கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள், பெண்களின் நலனிற்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், பெண் குழந்தைகளின் நலனிற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




மேலும், பெண் குழந்தைகளின் பாதுகாப்பு, கல்வி உள்ளிட்டவைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம், பாலின விகிதம் ஆகியவற்றை அதிகரிக்கும் விதமாகவும், பெண் குழந்தைகளின் முக்கியத்துவத்தை சிறப்பிக்கும் விதமாகவும், ஒவ்வொரு வருடமும் ஜனவரி 24 ஆம் நாள் தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றையதினம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், தேசிய பெண் குழந்தைகள் தினத்தினை முன்னிட்டு பெண் குழந்தைகளுக்கான திட்டங்கள், சட்டங்கள் மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு பேரணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இப்பேரணியானது, புதுக்கோட்டை இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் துவங்கி, 400க்கும் மேற்பட்ட தேசிய சாரணர் இயக்க மாணவிகள், கல்லூரி மாணவிகள் ஆகியோர் பங்கேற்று, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரி மைதானத்தை சென்றடைந்தது.

மேலும், இப்பேரணியின் மூலம், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெண் குழந்தைகளுக்கான திட்டங்கள், சட்டங்கள் ஆகியவற்றை தெரிந்துகொள்ள வாய்ப்பாக அமையும் எனவும் மாவட்ட கலெக்டர் மு.அருணா தெரிவித்தார்.

இப்பேரணியில், மாவட்ட சமூக நல அலுவலர்மு.சியாமளா, மாவட்ட திட்ட அலுவலர் க.ந.கோகுலபிரியா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் வசந்தகுமார், புதுக்கோட்டை வட்டாட்சியர் செந்தில்நாயகி, மண்டல துணை வட்டாட்சியர் ஆ.லட்சுமணன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# திருவாரூர் மாவட்டத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர்மருத்துவ சேவை முகாம்: கலெக்டர் ஆய்வு

திருவாரூர், ஜன.25

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் பேரூராட்சிக்குட்பட்டட அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர்மருத்துவ சேவை முகாம் நடைபெற்றுவருவதை திருவாரூர் மாவட்ட கலெக்டர் வ.மோகனச் சந்திரன், பார்வையிட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 06க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி நபர்களுக்கு மருத்துவச் சான்றுடன் கூடிய அடையாள அட்டை மற்றும் ஒன்றிய அரசின் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டையினையும், 7 நபர்களுக்கு காதொலி கருவியினையும் வழங்கினார்கள்.



மேற்கண்ட பரிசோதனைகள் மட்டுமன்றி, தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட சேவைகளும் வழங்கப்படுகிறது. இம்முகாமில், திருவாரூர் அரசு மருத்துவமனை முதல்வர் மரு.அசோக், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.சங்கீதா, வலங்கைமான் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி. ஷர்மிளா சிவனேசன், இணை இயக்குனர் சுகாதாரம் (பொறுப்பு) ஜெயகுமாரி, ஆலங்குடி வட்டார மருத்துவ அலுவலர் முகமது தாரிக், வலங்கைமான் வட்டாட்சியர் ஓம் சிவகுமார், வலங்கைமான் வட்டார வளர்ச்சி அலுவலர் முரளி மற்றும் பேரூராட்சி ஊழியர்கள், மருத்துவர்கள் செவிலியர்கள் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் மனித நேய வார விழா: மாவட்ட கலெக்டர் துவக்கி வைத்தார்

ஈரோடு, ஜன.25

ஈரோடு மாவட்டம், கலைமகள் கல்வி நிலையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் மனித நேய வார விழாவினை குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

மாவட்ட கலெக்டர் பேசும்போது தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து தரப்பு மக்களும் பல்வேறு வகையில் அரசு நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாடு அரசானது சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை முன்னெடுத்து வழிநடத்தி வரும் அரசாக செயல்பட்டு வருகிறது. கர்மவீரர் காமராஜர் அவர்கள் மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்கள் மற்றும் தந்தை பெரியார் அவர்கள் ஆகியோர்கள் சமூக நீதி மற்றும் சமத்துவத்திற்கு முக்கியத்துவம் அளித்து வழிநடத்தி வந்துள்ளார்கள். மனிதநேயம் என்பது சாதி, மதம், இனம், மொழி கடந்து அனைவரையும் சமமாக

மதித்து, அன்போடு நடத்தும் உயரிய பண்பாகும். சமூக நீதி மற்றும் மனித உரிமைகளை நிலைநிறுத்தவே இவ்விழாவானது கொண்டாடப்பட்டு வருகிறது. வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் சமத்துவத்தைப் போற்றும் வகையில் பள்ளி, கல்லூரிகளில் பேச்சு, ஓவியம், நாடகப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மனிதநேயம் என்பது அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதார



மேம்பாட்டிற்கும். ஒற்றுமைக்கும் வழிவகுக்கிறது. மேலும், மனித நேயம் என்பது சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தைப் பரப்புதல், வன்கொடுமைகளைத் தடுப்பது, சாதி, மதம், மொழி இனம் போன்ற எல்லைகளைக் கடந்து, மனிதர்களை அன்பால் இணைக்கவே இந்த விழா கொண்டாடப்படுகிறது. மேலும் மனிதநேயம் என்பது பிறரைத் துன்புறுத்தாமல் இருத்தல், உதவி தேவைப்படுபவர்களுக்கு நம்மால் இயன்றதைச் செய்தல். முதியவர்களையும், மாற்றுத் திறனாளிகளையும் கண்ணியத்துடன் நடத்துதல், இயற்கை மற்றும் விலங்குகள் மீதும் அன்பு காட்டுதல் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலாரின் கொள்ளகையை பின்பற்றி, மனிதநேயம் காப்போம் என தெரிவித்தார்.

மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் மனித நேய வார விழாவானது கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் இந்த மனித வார விழாவானது (24.01.2026) தொடங்கி 30.01.2026 வரை ஆகிய 7 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இன்றைய தினம், மாவட்ட கலெக்டர் கலைமகள் கல்வி நிலையத்தில் மனித நேய வார விழாவினை குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தும், துறை சார்ந்த அரசின் சாதனைகள் விளக்கிடும் வகையில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக்கண் காட்சியினை திறந்து வைத்து பார்வையிட்டார். பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டு கலை நிகழ்ச்சியில் மாணவ மாணவியர்களுக்கு புத்தகங்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மேலும், இவ்விழாவானது, 25.01.2026 அன்று கோபிசெட்டிபாளையம், டி.எஸ் ராமன் சரோஜினி விடுதியில் பள்ளி மற்றும் கல்லுரி மாணவ, மாணவியர்களின் பல்வேறு வகையான கலைப்போட்டிகளும், 26.01.2026 அன்று கோபிசெட்டிபாளையம், வைர விழா மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ள வன்கொடுமை தடுப்புச்சட்டம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்க நிகழ்ச்சியும், 27.01.2026 அன்று பர்கூர் அரசு பழங்குடியினர் நல உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ள தேசிய மாணவர் படை மாணவர்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சியும், 28.01.2026 அன்று சத்தியமங்கலம், ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் நடைபெறவுள்ள தேசிய மாணவர் படை மாணவர்களின் வன்கொடுமை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியும், 29.01.2026 அன்று ஈரோடு, மாவட்ட தொழில் மையம் சார்பில் சமூகத்தில் முன்னேறிய சான்றோர்கள் கொண்டு சமுதாய பொருளாதார முன்னேற்ற சிந்தனைக்கூட்டம், 30.01.2026 அன்று நிறைவு விழாவாக, ஈரோடு செங்குந்தர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவ மாணவியர்களுக்கு பரிசு வழங்குதல் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் நிகழ்ச்சியும் ஆகிய இடங்களில் மனித வார விழாவானது நடைபெறவுள்ளது,

இந்நிகழ்ச்சியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கு.மகேஸ்வரி, தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம், செல்வராஜ், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஜெய் சிங், அரசு சிறப்பு வழக்குரைஞர் பூங்கோதை, மாவட்ட விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் மோகன் ராஜ், செல்லமுத்து, குப்புசாமி, கலைமகள் கல்வி நிலையம் உதவி தலைமையாசிரியர் மீரா, உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# போதை பொருள் கடத்தல் படகை தாக்கி அழித்த அமெரிக்கா

வாஷிங்டன், ஜன.25

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை போதை பொருள் பயங்கரவாதி என்றும் அந்நாட்டில் இருந்து அமெரிக்காவுக்குள் அபாயகர போதை பொருட்கள் கடத்தப்படுகின்றன என்றும் டிரம்ப் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறினார்.

இந்த நிலையில், நிக்கோலஸ் மதுரோவும், அவருடைய மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க ராணுவ வீரர்களால் இந்த மாத தொடக்கத்தில், கைது செய்யப்பட்டு வெனிசுலாவில் இருந்து நாடு கடத்தப்பட்டனர்.

இதனை தொடர்ந்து, நிக்கோலஸ், அவருடைய மனைவி புளோரஸ் மீது நியூயார்க் நகரில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு உள்ளது. மதுரோ கைது செய்யப்பட்ட பின்னர்



முதன்முறையாக, கிழக்கு பசிபிக் பெருங்கடல் பகுதியில் போதை பொருள் கடத்தலுடன் தொடர்புடைய படகு ஒன்று தாக்கி அளிக்கப்பட்டு உள்ளது. இதனை அமெரிக்காவின் பாதுகாப்பு படை இன்று உறுதிப்படுத்தி உள்ளது.

அந்த தகவலில், படகின் மீது நடந்த தாக்குதலில் 2 பேர் கொல்லப்பட்டு விட்டனர். ஒருவர் உயிர்தப்பி விட்டார். அந்நபரை தேடி, கண்டுபிடித்து மீட்கும்படி கடலோர காவல் படைக்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த சமீபத்திய நடவடிக்கையால், இதுவரை தென்அமெரிக்க கடல் பகுதிகளில் போதை பொருள் கடத்தலில் ஈடுபட்ட படகுகள் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளான 36 படகுகள் தாக்கி அழிக்கப்பட்டு உள்ளன. கடந்த செப்டம்பர் தொடக்கத்தில் இருந்து எடுக்கப்பட்டு வரும் இந்த அதிரடி நடவடிக்கைகளால் 117 பேர் வரை பலியாகி உள்ளனர். அவற்றில் பல தாக்குதல்கள் கரீபியன் கடலில் நடந்துள்ளன. இதனை அமெரிக்க ராணுவத்தினரும், டிரம்பும் உறுதி செய்துள்ளனர்.

கடந்த 2 நாட்களுக்கு முன் சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் உலக பொருளாதார மன்றத்தின் 56வது வருடாந்திர உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கலந்து கொண்டு பேசும்போது, கரீபியன் மற்றும் கிழக்கு பசிபிக் நீர்வழி பகுதியின் வழியே அமெரிக்காவுக்கு வர கூடிய, ஏறக்குறைய 100 சதவீதம் வரையிலான அனைத்து போதை பொருள் கடத்தல் படகுகளை நாங்கள் தடுத்து நிறுத்தி விட்டோம் என கூறினார்.

# உங்க கனவ சொல்லுங்க திட்டம் குறித்த ஆலோசனைகளை கேட்டறிவது குறித்த சர்வே பணிகள்: கலெக்டர் நேரில் ஆய்வு

இராணிப்பேட்டை, ஜன.25

இராணிப்பேட்டை மாவட்ட கலெக்டர் ஜெ.யு.சந்திரகலா நெமிலி வட்டம், நெடும்புலி ஊராட்சி பெரியதெருவில் உங்க கனவ சொல்லுங்க திட்டத்தில் ஒவ்வொரு குடியிருப்புகளிலும் பொதுமக்களிடம் அரசின் திட்டங்களில் பயன்பெற்றுள்ள விவரங்கள் மற்றும் எதிர்காலத்திற்கான தேவைகள் குறித்த ஆலோசனைகளை கேட்டறிவது குறித்த சர்வே பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அப்பொழுது உங்க கனவ சொல்லுங்க குடும்ப உறுப்பினர்களிடம் விண்ணப்பித்தில் கோரியுள்ள குடும்பத்தில் உள்ளவர்கள்



ஏதேனும் அரசு திட்டத்தில் பயன்பெற்றுள்ளதையும், மேலும் அரசு நலத்திட்டங்கள் முறையாக கிடைக்கபெற்றுள்ளதா? என்பதையும் கேட்டறிந்து, தொடர்ந்து, 2030 ஆம் ஆண்டிற்குள் உங்கள் குடும்பத்திற்கு அரசின் மூலம் தேவைப்படும் திட்டங்கள் என்ன என்பது குறித்த விவரங்களையும் தெரிவிக்க குடும்ப உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டார்.

இதனை தொடர்ந்து, குடும்ப உறுப்பினர்களிடம் பெறப்பட்டு வரும் விவரங்கள் குறித்தும், அதனை கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்துள்ள விவரங்கள் குறித்தும் தன்னார்வலர்களிடம் கேட்டறிந்தார்கள்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகளிர் சுயஉதவிக்குழு தன்னார்வலர்கள் மூலம் உங்கள் கனவை செல்லுங்கள் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு வருகிறது. இதில் ஊரக பகுதியில் 250125 பயனாளிகளும் நகர் பகுதியில் 70786 பயனாளிளும் 774 தன்னார்வலர்களை கொண்டு கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் 23.01.2026 வரை ஊரக பகுதிகளில் 27,605படிவங்களும் நகர்ப்பகுதிகளில் 6,706 படிவங்களையும் விநியோகம் செய்யப்பட்டு, இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் உதவி மகளிர் திட்ட அலுவலர்கள் வெங்கடேசன், வட்டாட்சியர் ராஜலட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயஸ்ரீ, சிவகுமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# இந்தோனேசியாவில் நிலச்சரிவு 8 பேர் பலி: 82 பேர் மாயம்

ஜகார்த்தா, ஜன.25

இந்தோனேசியாவின் தீவு கூட்டங்களில் ஒன்றான ஜாவா தீவில் பெய்து வரும் கனமழையால், நிலச்சரிவு ஏற்பட்டு உள்ளது. இதில் மேற்கு ஜாவா மாகாணத்தின் மேற்கு பாண்டுங் மாவட்டத்தில் உள்ள பசிர் லாங்கு கிராமத்தில் தொடர் கனமழையால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, கரைகளை உடைத்து கொண்டு வெள்ள நீர் ஓடுகிறது.

சேறு, பாறைகள் மற்றும் மரங்கள் வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டு, அதனால்,



மலைப்பிரதேசத்தில் இருந்த 34 வீடுகள் அடியோடு புதைந்து போயின.

இந்த சம்பவத்தில், 8 பேர் பலியாகி உள்ளனர். 82 பேரை காணவில்லை. தகவல் அறிந்து தேசிய பேரிடர் மேலாண் கழகத்தின் மீட்பு குழுவினர் தேடுதல் பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

இதில், 24 பேர் எப்படியோ தப்பி விட்டனர். தொடர்ந்து மீட்பு பணி நடந்து வருகிறது.

நிலச்சரிவு பகுதிகளில் மக்கள் தொடர்ந்து எச்சரிக்கையுடன் இருக்கும்படியும், ஏதேனும் உருளுவது போன்ற சத்தம் கேட்டால், மண் சரிவு அல்லது நிலைமை மோசம் என தெரிய வந்தது என்றால், உடனடியாக அந்த பகுதியை விட்டு வெளியேறி செல்லுங்கள் என அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

கடந்த டிசம்பரில், பெருவெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் தாக்கியதில் சுமத்ரா தீவில் 1,200 பேர் பலியானார்கள். 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

# கரூர் மாவட்ட கலெக்டர் தலைமையில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்

கரூர், ஜன.25

மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் கரூர் மாவட்டம், பரமத்தி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தின் மூலம் அனைத்து வகையான உடல் பரிசோதனைகளும், 17 வகையான சிறப்பு மருத்துவ சிகிச்சைகளும், முதல்வரின் விரிவான காப்பீடு திட்ட அட்டை மற்றும் மாற்றுத்திறனாளி களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது.

"நலம் காக்கும் ஸ்டாலின்" பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பு முறிவு மருத்துவம், பேறு கால மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இதய



நல மருத்துவம், நரம்பியல் சிறப்பு மருத்துவம், நுரையீரல் சிறப்பு மருத்துவம், நீரழிவு நோய்க்கான சிறப்பு மருத்துவம், தோல் சிறப்பு மருத்துவம், பல் மருத்துவம், கண் சிறப்பு மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், சித்த மருத்துவம், உணவியல் மருத்துவம், ஆகிய 17 சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் சிறப்பு மருத்துவ நிபுணர்களால் வழங்கப்பட உள்ளது.

இம்முகாமில் அனைத்து சிகிச்சைகளும் பரிசோதனைகளும் ஆன்லைன் மூலம் பதிவு செய்யப்படுகிறது. கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், நீரழிவு நோய் மற்றும் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், இதய நோயாளிகள், படுக்கையுற்ற நோயாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளை இலக்காகக் கொண்டு இம்முகாம்கள் நடைபெற்று வருகிறது.

கரூர் மாவட்டத்தில் கடந்த 02.08.2025 முதல் 22.01.2026 வரை நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாம்களின் மூலம் 12,540 ஆண்கள், 21,068 பெண்கள் உள்ளிட்ட மொத்தம் 33,750 நபர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதென மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தெரிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, காசநோயால் பாதிக்கப்பட்ட 3 நபர்களுக்கும், 12 கர்ப்பிணிப் பெண்களுக்கும் ஊட்டச்சத்து பெட்டகங்களையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக 1 நபர்களுக்கு தேசிய அடையாள அட்டை மற்றும் ஊன்றுகோலையும், தொழிலாளர் நலத் துறையின் சார்பாக 3 நபர்களுக்கு தூய்மை பணியாளர்களுக்க நலவாரிய அட்டைகளையும் மற்றும் நேரு பாராட்டி நிக்ஷய் மித்ரா சான்றிதழையும் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் வழங்கினார்.

இம்முகாமில் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு. சுப்பிரமணியன், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சூளகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தேசிய வாக்காளர் தினம் உறுதி மொழி ஏற்பு

ஒசூர், ஜன 25

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் திமுக கழக ஒன்றியச் செயலாளர் கே.சி.பாக்யராஜ் தலைமையில் தேசிய வாக்காளர் தினம் முன்னிட்டு மாணவ,மாணவிகள் உடன் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் பள்ளித் தலைமை ஆசிரியர் மகாதேவன் முன்னிலையில் உறுதிமொழி நடைபெற்றது. உடன் ஆசிரியர்கள் மற்றும் பிஎல்ஓ, பிடிஏ, மற்றும் பள்ளி அரசு அதிகாரிகள், திமுக கழக நிர்வாகிகள், பொதுமக்கள், எனப் பலர் உடன் இருந்தனர்.



# நாம் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மட்டுமே வெற்றி பெற முடியும்: ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் உதயகுமரன் பேச்சு

ஈரோடு, ஜன.25

நாம் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்று ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் உதயகுமரன் கூறினார்.

ஈரோடு வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவராக உதயகுமரன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஈரோடு வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவராக மாநில பொதுக்குழு உறுப்பினராக பணியாற்றி வந்த உதயகுமாரனை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைமை நியமித்தது இதை தொடர்ந்து கோபிசெட்டிபாளையத்தில் மாவட்ட தலைவராக பொறுப்பேற்கும் நிகழ்ச்சி கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது இதைத் தொடர்ந்து முன்னாள் தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தனது பொறுப்புகளை புதிய தலைவரிடம் ஒப்படைத்தார. பொறுப்புக்களை பெற்றுக் கொண்டு உதயகுமரன் கூறிய போது...

தனிப்பட்ட ஒரு நாள் எதையும் சாதிக்க முடியாது அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட்டால் வெற்றி பெற முடியும். இங்கு உள்ள நிர்வாகிகளின் விட என் வயது குறைவகாக இருந்தாலும் ஈரோடு வடக்கு மாவட்டம் உள்ள நிர்வாகிகள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் ஒரு சட்டமன்ற உறுப்பினரை வெற்றி பெற செய்வதற்கு நாம் அனைவரும் பாடுபட வேண்டும். வரும் சட்டமன்றத் தேர்தலை கருத்தில் கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் நமது பணியை தீவிர படுத்த வேண்டும் என்று கூறினார் இந்த நிகழ்ச்சியில் ஈரோடு வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் நல்லசிவம் , கள்ளிப்பட்டி பாலு. எளிமையான காங்கிரஸ் தேசிய செய்தி தொடர்பாளர் கோதண்டன், கோபி வட்டார காங்கிரஸ் தலைவர் இந்துஜா, பொதுக்குழு உறுப்பினர் செந்தில் குமார், சத்தியமங்கலம் வர்த்தக காங்கிரஸ் தலைவர் சங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உக்ரைனின் மற்றொரு கிராமம் எங்கள் பிடியில்: ரஷியா அறிவிப்பு

மாஸ்கோ, ஜன.26

உக்ரைன் நாடு, நேட்டோவில் சேரும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, 2022ம் ஆண்டு பிப்ரவரியில், அந்நாட்டின் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற பெயரில் ரஷியா போர் தொடுத்தது. இந்த போரானது 3 ஆண்டுகளை கடந்தும் முடிவுக்கு வராமல் தொடர்ந்து நீடித்து வருகிறது.

போர் எதிரொலியாக லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளதுடன் லட்சக்கணக்கானோர் புலம்பெயர்ந்து சென்று விட்டனர். போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தலைமையிலான அரசு ஈடுபட்டு வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்யும் முயற்சியாக போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்த பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.



இந்த நிலையில், அமெரிக்காவின் முயற்சியில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, போரால் கடுமையாக பாதிக்கப்பட்ட உக்ரைனின் மறுகட்டமைப்பு பணிகளுக்கு, உதவ தயார் என புதின் சமீபத்தில் கூறினார்.

இதற்காக, அமெரிக்காவில் முடக்கி வைக்கப்பட்டு உள்ள ரஷிய சொத்துகளை தருவதற்கு தயார் என்றும் கூறி ஆச்சரியப்படுத்தினார். இதற்கான சாத்தியங்கள் தொடர்பாக அமெரிக்க நிர்வாகத்தின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறோம் என்றும் கூறினார்.

இந்த நிலையில், ரஷிய பாதுகாப்பு அமைச்சகம் இன்று வெளியிட்ட செய்தியில், உக்ரைனின் வடமேற்கே கார்கிவ் பகுதியில் அமைந்த ஸ்டாரைட்சியா என்ற கிராமம் முற்றிலும் எங்களுடைய படைகளின் வசம் வந்து விட்டது என தெரிவித்து உள்ளது.

உக்ரைனின் நீண்டதூர டிரோன் தளங்கள் மற்றும் எரிசக்தி மையங்களின் மீது நள்ளிரவில் பெரிய தாக்குதலை ரஷிய படைகள் நடத்தி உள்ளன என்றும் தெரிவித்து உள்ளது. ஒரு புறம் போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை என கூறி வரும் ரஷியா, மறுபுறம் தொடர்ந்து தாக்குதலிலும் ஈடுபட்டு வருவது பரபரப்பாக பார்க்கப்படுகிறது.

# முத்துப்பேட்டை வட்டம், தெற்கு காடு கிராமத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு பூமி பூஜை

திருவாரூர், ஜன.26

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை வட்டம், தெற்கு காடு கிராமத்தில் ரூ.4 கோடியே 92 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு, கட்டுமான பணிகளுக்கு மாவட்ட கலெக்டர் வ.மோகனச்சந்திரன், நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வை. செல்வராஜ் அவர்களும், திருத்துறைப்புண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து அவர்களும் அடிக்கல் நாட்டினார்கள்.



இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் கலைவாணி, மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் யோகேஸ்வரன், செயற்பொறியாளர் (கட்டடம் மற்றும் பராமரிப்பு கோட்டம்) வரத ராஜன், முத்துப்பேட்டை வட்டாட்சியர் கிருஷ்ணகுமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அமெரிக்காவில் இந்திய பெண் உள்பட 4 பேர் சுட்டுக்கொலை - கணவர் கொடூர செயல்



அமெரிக்கா, ஜன.26

அமெரிக்காவின் ஜார்ஜியா மாகாணம் அட்லாண்டா நகரில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விஜயகுமார் (வயது 51) தனது குடும்பத்துடன் வசித்து வந்தார். இந்த நிலையில், விஜயகுமார் வீட்டில் துப்பாக்கியால் சுடும் சத்தங்கள் கேட்டன. இதுகுறித்து தகவல் அறிந்ததும் போலீசார் அங்கு வந்து விஜயகுமார் வீட்டுக்குள் சென்றனர். அப்போது, விஜயகுமாரின் மனைவி மீனா டோக்ரா (43), உறவினர்கள் கவுரவ் குமார் (33), நிதி சந்தர் (37), ஹரிஷ் சந்தர் (38) ஆகிய 4 பேர் பிணமாகக் கிடந்தனர். அவர்கள் உடல்களில் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்திருந்தது. குடும்பத் தகராறின் போது ஏற்பட்ட வாக்குவாதத்தின் காரணமாக, மனைவி மற்றும் உறவினர்களை விஜயகுமார் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றது தெரியவந்தது. இதையடுத்து, அவரை போலீசார் கைது செய்தனர்.

துப்பாக்கிச் சூடு நடந்த போது, அந்த வீட்டுக்குள் 3 சிறுவர்கள் இருந்தனர். அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு அலமாரியில் ஒளிந்து கொண்டிருந்தனர். 3 சிறுவர்களையும் போலீசார் மீட்டனர். துப்பாக்கிச் சூடு குறித்து, இந்த சிறுவர்களில் ஒருவர் போலீசாரை அவசர எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த குழந்தைகளுக்கு எந்தக் காயமும் ஏற்படவில்லை.

அவர்கள் ஒரு குடும்ப உறுப்பினரின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டனர். விஜயகுமார் மீது கடுமையான தாக்குதல், கொடூரமான கொலை, தீய நோக்கத்துடன் கூடிய கொலை மற்றும் குழந்தைகளுக்கு எதிரான கொடுமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக இந்திய தூதரகம் கூறியதாவது:"

அட்லாண்டாவில் குடும்பத் தகராறு காரணமாக நடந்த துயரமான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் எங்களை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

குற்றம் சாட்டப்பட்ட நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், துயரத்தில் உள்ள குடும்பத்திற்கு சாத்தியமான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன" என்று தெரிவித்துள்ளது.

# 16-ஆவது தேசிய வாக்காளர் தின விழாவிற்கான வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சி: கலெக்டர் பங்கேற்பு

கடலூர், ஜன.26

கடலூர், மஞ்சக்குப்பம் புனித வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 16ஆவது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றபெற்றவர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில் குமார் வழங்கினார். முன்னதாக, கடலூர் நகர அரங்கில் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரம் செயல்முறை குறித்து வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்குமான நடமாடும் வாக்காளர் செயல்முறை விளக்க வாகனத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில் குமார் தெரிவித்ததாவது,

1950 ஆம் ஆண்டு ஜனவரி 25 அன்று இந்திய தேர்தல் ஆணையம் தோற்றுவிக்கப்பட்டதை கொண்டாடும் விதமாக 2011 முதல் தேசிய வாக்காளர் தினம் பின்பற்றப்படுகிறது. இந்திய அரசாங்கத்தால் இளம் வாக்காளர்களை ஊக்கப்படுத்து வதற்காக ஜனவரி 25ஆம் நாளினை தேசிய வாக்காளர் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இந்நாளின் நோக்கம் “மக்கள் வாக்களிப்பதை தங்கள் கடமையாக கருத வேண்டும்“ என்ற விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதே ஆகும்.

சாதி, மதம், இனம் என்ற வேறுபாடுகளை களைந்து 18 வயது நிரம்பிய இந்திய குடியுரிமை பெற்ற மக்கள் அனைவரும் வாக்களிக்க தகுதி உள்ளவர்கள் ஆவார்கள். தேர்தல் குறித்தும், ஒவ்வொரு வாக்காளரின் முக்கியத்துவம் குறித்தும், 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது.

தேர்தல்களை மக்களாகிய நாம் எப்படி எதிர்கொள்ள வேண்டும், தேர்தலின் போது மக்களின் சிந்தனை எவ்வாறு இருக்க வேண்டும், வளரும் சமுதாயத்தினரின் வாக்குரிமைகளை நிறைவேற்ற இருக்கும் எளிய வழிமுறைகள் எவை, ஐந்தாண்டு காலம் நம்மை ஆளக்கூடிய அரசியல் ஆளுமையை எப்படி தேர்ந்தெடுப்பது என்பது போன்ற பல கேள்விகளுக்கு உரிய பதிலை தேடி செல்வதன் அடையாள தேதியே ஜனவரி 25 (தேசிய வாக்காளர் தினம்) ஆகும். எனவே, வாக்காளர்கள் அனைவரும் தங்களுடைய வாக்கினை எதிர்வரும் தேர்தலில் ஜனநாயக முறைப்படி செலுத்த வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில் குமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணியகோட்டி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ப.தீபா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) வெங்கடேசன், மாநகராட்சி ஆணையாளர் முஜிபூர் ரஹ்மான், கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தரராஜன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்ட அலுவலர் செல்வி, மாவட்ட சமூக நல அலுவலர் சித்ரா, தேர்தல் வட்டாட்சியர் சுரேஷ்குமார், கல்லூரி அருட்தந்தை க.சேவியர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சி: மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது

புதுக்கோட்டை, ஜன.26

இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவின்படி, புதுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில், 16வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியினை, மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் மு.அருணா கொடியசைத்து துவக்கி வைத்தார்.



பின்னர் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி, சட்டமன்றத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தேசிய வாக்காளர் தினமானது ஜனவரி மாதம் 25ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, இந்த ஆண்டு இன்றையதினம் 16வது தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்பட்டது. இதில் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், புதுக்கோட்டை கலைஞர் புங்காவில், எனது இந்தியா எனது வாக்குரூநரழவ் உள்ளிட்ட விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஹீலியம் பலூனை பறக்க விட்டு வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், தன் புகைப்படம் எடுப்பதற்கான அமைப்பில், தன் புகைப்படம் எடுத்துக்கொள்ளப்பட்டது. திருக்கோகர்ணம் பகுதியில் 100 வயதிற்கு மேற்பட்ட மூத்த வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் 100 சதவீதம் வாக்கினை பதிவு செய்திடும் வகையில், வாக்காளர்கள் அனைவரும் தவறாது வாக்களித்து ஜனநாயக கடைமையாற்றிட வேண்டும் எனவும் மாவட்ட தேர்தல் அலுவலர்ஃ மாவட்ட கலெக்டர் மு.அருணா தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பா.ஜெயசுதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எஸ்.திருமால், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் த.நாராயணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சு.பார்த்தசாரதி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்/ தணிக்கை) எஸ்.வேதலெட்சுமி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) செந்தில்குமார், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் க.ந.கோகுலப்பிரியா, தனி வட்டாட்சியர் (தேர்தல்) அ.செந்தமிழ்குமார், புதுக்கோட்டை வட்டாட்சியர் மு.செந்தில்நாயகி, மண்டலதுணை வட்டாட்சியர் ஆ.லட்சுமணன், துணை வட்டாட்சியர்கள் (தேர்தல்) செல்வகணபதி, முகமது இஸ்மாயில், கணினி நிரலர் ஜான்பால் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# 16வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு வாக்காளர் விழிப்புணர்வு பேரணி: மாவட்ட கலெக்டர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

கரூர், ஜன.26

கரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலரும்,மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் 16வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்ட வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தும், மூன்று தலைமுறையில் உள்ள வாக்காளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்தும் நினைவு பரிசுகளை வழங்கினார்.



பின்னர் மாவட்ட தேர்தல் அலுவலரும் மற்றும் மாவட்ட கலெக்டர் தெரிவிக்கையில்,

தேர்தல் நடைமுறைகளை நிர்வகிப்பதற்காக ஒரு தன்னாட்சி அரசியலமைப்பு அதிகாரம் கொண்டதாக கடந்த 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ம் தேதி இந்திய தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டது. ஜனவரி 25 ம் தேதி, ஒவ்வொரு வருடமும் தேசிய வாக்காளர் தினமாக 2011 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.

2026 ஆம் ஆண்டு 16வது தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்நாள் எனது இந்தியா, எனது வாக்கு என்ற இலட்சினையுடனும் மற்றும் இந்திய ஜனநாயகத்தின் இதயத்தில் இந்திய குடிமகன் என்ற வாசகத்துடனும் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் ஜனவரி 1ம் தேதியை தகுதியான நாளாகக் கொண்டு, புதிய வாக்காளர்களை பெருமளவில் சேர்த்தல் அதிலும் குறிப்பாக 18 வயது பூர்த்தியடைந்த இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கும், தேர்தல் நடவடிக்கைகளில் வாக்காளர்களை முழு அளவில் பங்கேற்க செய்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் தேசிய வாக்காளர் தின விழா கொண்டாடப்படுகிறது.

17.02.2026 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. ://... என்ற மொபைல் செயலி மூலமாகவும், வாக்காளர்கள் அவர்களது பெயர், புகைப்படம் மற்றும் இதர பதிவுகள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளலாம். கரூர் மாவட்டத்தில் வாக்காளர்களுக்கு ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் தீர்வளிக்கும் வகையில் 1950 என்ற எண்ணில் வாக்காளர் உதவி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல், தெரிவித்தார்.

முன்னதாக 135 கரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 ஐ முன்னிட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரம் செயல்முறை குறித்த விழிப்புணர்வு மையத்தினை திறந்து வைக்கப்பட்டது. மேலும் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் எடுத்துக் கொண்டனர். எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 ஐ முன்னிட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 135 கரூர்,134 அரவக்குறிச்சி,136 கிருஷ்ணராயபுரம்,137 குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் செயல்முறை குறித்த விழிப்புணர்விற்கான நடமாடும் செயல்முறை விளக்க வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) யுரேகா, மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உதவி ஆணையர் கலால் முருகேசன்,மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார், கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமதுபைசல், கரூர் துணை காவல் கண்காணிப்பாளர் செல்வராஜ் தேர்தல் வட்டாட்சியர் தனசேகரன் மற்றும் அனைத்து வட்டாட்சியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
26.01.2026

# ஈரோடு மாவட்டத்தில் இது நம்ம ஆட்டம் 2026 ஒன்றிய அளவிலான விளையாட்டுப் போட்டி: கலெக்டர் துவக்கி வைத்தார்




ஈரோடு, ஜன.26

ஈரோடு வ.உ.சி விளையாட்டரங்கத்தில் மாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா 'இது நம்ம ஆட்டம் 2026' ஒன்றிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் இளைய தலைமுறையினரின் சமூக முன்னேற்றம், உடற்கல்வி, விளையாட்டு சமூக இணைப்பு மற்றும் உடல்மன ஆரோக்கியத்தை வலுப்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு முழுவதும் ஊராட்சி ஒன்றிய அளவில் மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா 'இது நம்ம ஆட்டம் 2026' போட்டிகள் நடத்த உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தடகளம், கையுந்துபந்து, கிரிக்கெட் சதுரங்கம், ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன இதில் 16 வயது முதல் 35 வரையிலான தகுதியுடைய அனைத்து இளைஞர்களும் கலந்து கொண்டனர். தொடர்ந்து ஊராட்சி ஒன்றிய அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு முதல் இடம் பெற்றவருக்கு தலா ரூ.3,000/ பரிசுத் தொகையும், இரண்டாம் இடம் பெற்றவருக்கு தலா ரூ.2,000/ பரிசுத் தொகையும், மூன்றாம் இடம் பெறுபவருக்கு தலா ரூ.1000/ பரிசுத் தொகையும், வழங்கப்படவுள்ளது.

ஈரோடு மாவட்டத்திற்கு ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு தலா 4,26,000/ வீதம் 14 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.59,64,000/வழங்கப்பட்டவுள்ளது. இன்றைய தினம் நடைபெற்ற ஊராட்சி ஒன்றிய அளவிலான அனைத்து விளையாட்டுப்போட்டிகளிலும்

வெற்றி பெற்ற 924 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1,74,000/ வீதம் 14 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.24,36,000/ மதிப்பிலான பரிசுத் தொகை வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில், ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ரமேஷ்கிருஷ்ணன் (வளர்ச்சி), ஈரோடு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் சதீஷ்குமார், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதுகள் அறிவிப்பு




பத்ம விருதுகள் ஆண்டுதோறும் குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்படும் இந்தியாவின் உயரிய சிவிலியன் விருதுகளில் ஒன்றாகும். இந்த விருதுகள் பத்ம விபூஷன், பத்ம பூஷன் மற்றும் பத்மஸ்ரீ ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகின்றன. பொது சேவை மற்றும் முக்கிய துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்தவர்களைகவுரவிக்க இந்த விருது வழங்கப்படுகிறது.

அந்த வகையில், 2026ம் ஆண்டுக்கான பத்மஸ்ரீ விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் மொத்தம் 5 பேருக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த கால்நடை மருத்துவ ஆராய்ச்சியாளர் புண்ணிய மூர்த்தி நடேசன், ஓதுவார் திருத்தணி சுவாமிநாதன்,

ஓவியர் நீலகிரி ஆர். கிருஷ்ணன், சிற்பக் கலைஞர் காளியப்ப கவுண்டர், திருவாரூர் பக்தவத்சலம் ஆகியோருக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், புதுச்சேரியை சேர்ந்த சிலம்பக் கலைஞர் கே.பழனிவேலுக்கும் பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பூர் வடக்கு மாவட்ட பாமக – மாநில, மாவட்ட நகரப் பொறுப்புகள் வழங்கல்



திருப்பூர் வடக்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி. அறிவுக்கடல் டாக்டர் ராமதாஸ் ஐயா நல்லாசியோடு. செயல் தலைவர் அக்கா ஸ்ரீகாந்தி அவர்களின் ஆசியோடு. மற்றும் மாநில பொருளாளர் அண்ணன் மன்சூர். மற்றும் கொங்குமண்டலபொறுப்பாளர்அண்ணன்கரூர்பாஸ்கரன் அவர்களுக்கும் திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர். கவின் ஜிம் வி ஜெயமுருகன் அவர்களுக்கும் திருப்பூர் மாவட்ட மாநில நகர பொறுப்புகளை எங்களுக்கு வழங்கியமைக்குநன்றியினைதெரிவித்துக்கொள்கிறோம். மாநில செயற்குழு உறுப்பினர் பெரியார். ஜெமினி மகேந்திரன். இளைஞர் அணி செயலாளர் விக்னேஷ் தலைவர் நவீன் குமார். மகளிர் அணி செயலாளர் நாகலட்சுமி. இளம் பெண்கள் சங்கத் தலைவர் பாரதி. அமைப்பு தலைவர் ஜெய் குமார். மாவட்டத் துணைத் தலைவர் பிரபு. சட்டப் பாதுகாப்புக்குழு செயலாளர் சபரி. தேர்தல் பணி குழு செயலாளர் கார்த்திக். தலைவர் ரமேஷ். கொள்கை விளக்க அணி செயலாளர் சரவணன். தலைவர் தேவராஜ். தொண்டரணி செயலாளர் சூர்யா. தலைவர் மணிகண்டன். சமூக ஊடகப் பேரவை செயலாளர் ராம்குமார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் பிரியங்காநகர் சரவணன். சக்தி விநாயகம்.

# கேரளாவில் கார் விபத்து; அதிர்ஷ்டவசத்தில் உயிர் தப்பிய கலெக்டர்

கேரளாவில் பத்தனம்திட்டா மாவட்ட கலெக்டர் பிரேம் கிருஷ்ணன் அவருடைய வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, எதிர்திசையில் விரைவாக வந்த கார் ஒன்று அவருடைய வாகனம் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது.

கொன்னி என்ற பகுதியருகே நடந்த இந்த விபத்தில், காரில் இருந்த க பிரேம், பாதுகாப்பு அதிகாரி மற்றும் ஓட்டுநர் படுகாயமடைந்தனர். இதுபற்றி கலெக்டர் பிரேம் இன்று கூறும்போது, வாகனத்தின் பின்புறத்தில் நான் அமர்ந்திருந்தேன். சீட் பெல்ட்டும் அணிந்திருந்தேன். இதனால், கார் மோதியபோதும் வாகனத்தின் உள்ளே தூக்கி வீசப்படவில்லை. பாதுகாப்பாக இருந்தேன். உள்ளூர்வாசிகளும் உடனடியாக ஓடி வந்து என்னை எளிதில் வெளியே கொண்டு வந்தனர் என கூறினார். விபத்து பற்றி கூறிய அவர், நாங்கள் எங்களுடைய வழியில் பயணித்து கொண்டு இருந்தோம். ஆனால், தவறான திசையில் எதிரில் விரைவாக கார் வந்தது. எங்கள் ஓட்டுநர் காரை மோதலில் இருந்து தவிர்க்க முயன்றபோதும், அந்த கார் எங்களுடைய வாகனம் மீது மோதியது. சீட் பெல்ட்டால் நான் காப்பாற்றப்பட்டேன் என்றார். இந்த சம்பவத்தில், காரில் இருந்த 4 பேருக்கும் காயங்கள் ஏற்பட்டு உள்ளன. இதுதொடர்பாக வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (26.01.2026)

**மேஷம்:** இன்று பொறுமை தேவைப்படும் நாள். பேச்சில் நிதானம் இருந்தால் குடும்பத்தில் குழப்பங்களைத் தவிர்க்கலாம். வாகனப் பயணங்களில் எச்சரிக்கை அவசியம்.

**ரிஷபம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். கணவன்மனைவி இடையே ஒற்றுமை பலப்படும்.

**மிதுனம்:** நினைத்த காரியங்கள் தடையின்றி முடியும். பணியிடத்தில் உங்கள் திறமைக்குஅங்கீகாரம்கிடைக்கும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும்.

**கடகம்:** அலைச்சல்கள் அதிகமாக இருந்தாலும், மாலை நேரத்தில் மனநிம்மதி கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படலாம், சிக்கனம் தேவை.

**சிம்மம்:** உறவினர்களிடையே மதிப்பு உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு அமையும். புதிய முயற்சிகள் வெற்றியைத் தரும்..

**கன்னி:** அலுவலகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். கடன் சுமைகள் குறையத் தொடங்கும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**துலாம்:** உற்சாகமான நாள். திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை சேரும்.

**விருச்சிகம்:** மனதில் சிறு குழப்பங்கள் வந்து செல்லும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். அமைதியாகஇருந்தால்நன்மைகள் தேடி வரும்.

**தனுசு:** துணிச்சலான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். சகோதர வழியில் அனுகூலம் உண்டாகும். வெளியூர் பயணங்கள் நன்மையளிக்கும்.

**மகரம்:** பேச்சால் காரியங்களைச் சாதிப்பீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும்.

**கும்பம்:** தடைபட்ட காரியங்கள் இன்று கைகூடும். செல்வாக்கு உயரும் நாள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த தகவல் வந்து சேரும்.

**மீனம்:** வேலைப்பளு அதிகமாகத் தோன்றும். எதிலும் ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்துச் செயல்படுவது நல்லது. தியானம் மன அமைதி தரும்.

# ரெட்டிபாளையத்தில் திராவிட பொங்கல் விழா



திருப்பூர், ஜன.26

ஊத்துக்குளி தெற்கு ஒன்றியம் திமுக சார்பில் ரெட்டி பாளையத்தில் திராவிட பொங்கல் விழா.சிறுவர் சிறுமிற்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று பரிசு வழங்கும் விழா மற்றும் அன்னதானம் வழங்கும் விழாவினை முன்னாள் அமைச்சர் ஈரோடு மத்திய மாவட்ட கழகச் செயலாளர் தோப்பு வெங்கடாச்சலம் துவக்கி வைத்தார். வருகை தந்த அவருக்கு கழக நிர்வாகிகள் உற்சாகமாக நடனமாடி வரவேற்றனர் ஒன்றிய செயலாளர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மொரட்டு பாளையம் பிரபு, ஊத்துக்குளி பேரூர் கழக பொறுப்பாளர் திருமூர்த்தி. ஒன்றிய அவைத் தலைவர் வேலுச்சாமி, மாவட்ட பிரதிநிதி விஜயகுமார். சாமிக்கண்ணு. ஒன்றிய துணைச் செயலாளர் பத்மாவதி துரைசாமி. மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் குமார். மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் தனம் சுப்பிரமணியம். மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் சந்திரன். மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் அன்பரசு. மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு துணை அமைப்பாளர் அருண்குமார். தலைமை செயற்குழு உறுப்பினர் கொண்ட சாமி. சிறுபான்மை பிரிவு ஒன்றிய அமைப்பாளர் முபாரக்கான். மொபைல் அப்பாஸ். முன்னாள் பேரூராட்சி கவுன்சிலர்கள் பிரவீனா பாண்டுரங்கன். மெடிக்கல் கணேஷ். பேபி திருமூர்த்தி. மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்...

# "அம்மாவின் இளமை ரகசியம் இதுதான்"... ஜான்வி கபூர் பகிர்ந்த டிப்ஸ்



தெலுங்கு, தமிழ், இந்தி, மலையாளம் மற்றும் கன்னட மொழித் திரைப்படங்களில் முன்னணி நடிகையாக வலம் வந்தவர் நடிகை ஸ்ரீதேவி. இந்திய சினிமாவின் "முதல் பெண் சூப்பர் ஸ்டார்" எனப் போற்றப்பட்ட அவர், 1967ம் ஆண்டு 'கந்தன் கருணை' திரைப்படத்தின் மூலம் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானார். பின்னர் முன்னணி நடிகையாக உயர்ந்த ஸ்ரீதேவி, தயாரிப்பாளர் போனி கபூரை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஜான்வி கபூர், குஷி கபூர் என இரண்டு மகள்கள் உள்ளனர். நடிகை ஸ்ரீதேவி 2018ம் ஆண்டு, 54 வயதில் காலமானார்.

எப்போதும் இளமையாகவும் அழகாகவும் தோன்றிய ஸ்ரீதேவியின் இளமை ரகசியம் குறித்து, அவரது மகள் ஜான்வி கபூர் சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அந்த பேட்டியில், "எங்கள் வீட்டில் காலை உணவில் பழங்கள் தவறாமல் இடம்பெறும். மீதமிருக்கும் பழங்களை ஜூஸாக்கி அம்மா முகத்தில் தேய்த்துக்கொள்வார். சிறிது நேரம் கழித்து கழுவினால் முகம் பளிச்சென்று மாறிவிடும். பழங்கள் முகச் செல்களுக்கு புத்துணர்ச்சி அளித்து, இறந்த செல்களை நீக்க உதவுகின்றன. இந்த பழக்கத்தை அம்மா தொடர்ந்து கடைப்பிடித்தார். அந்த பழக்கம் எனக்கும் வந்துவிட்டது. இதுவே அம்மாவின் இளமை ரகசியம்" என்று ஜான்வி கபூர் தெரிவித்துள்ளார்.

# சமுத்திரகனி நடிக்கும் "தடயம்" – விரைவில் ஓடிடியில் ரிலீஸ்




இந்தியாவின் முன்னணி ஓடிடித் தளமான ZEE5 (ஜீ5) தமிழின் பிராந்திய ரசிகர்களை உற்சாகப்படுத்தும் வகையில், தனது அடுத்த படைப்பான "தடயம்" படைப்பின் அறிவிப்பை, நேற்று அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது.

தமிழ் சினிமாவில் தனித்துவமான கதைகளுக்கும், சமூகப் பார்வை கொண்ட நடிப்புக்கும் பெயர் பெற்ற சமுத்திரகனி, மீண்டும் ஜீ5 ஓடிடி தளத்தில் ஒரு முக்கிய படைப்புடன் வருகிறார். "தடயம்" எனும் இந்த புதிய படைப்பு, விரைவில் ஜீ5ல் வெளியாக இருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நவீன் குமார் பழனிவேல் இயக்கத்தில், அஜய் கிருஷ்ணா தயாரிப்பில் உருவாகியுள்ள "தடயம்", சமுத்திரகனியின் வலுவான நடிப்புத் திறனை மையமாகக் கொண்டு உருவான ஒரு தீவிரமான கதையம்சம் கொண்ட படைப்பாக எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.

இதற்கு முன்னதாக, சமுத்திரகனி இயக்கி நடித்த "விநோதய சித்தம்" திரைப்படம் ஜீ5ல் வெளியானபோது, விமர்சகர்களிடமும் ரசிகர்களிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. அந்தப் படம், வாழ்க்கை–மரணம், நேரம், மனித உறவுகள் போன்ற ஆழமான கருத்துகளை எளிய முறையில், தாக்கம் கொண்ட திரைக்கதையில் சொல்லி, ஜீ5யின் முக்கியமான தமிழ் படைப்புகளில் ஒன்றாக மாறியது.

அந்த வெற்றியின் தொடர்ச்சியாக, "தடயம்" திரைப்படமும் ஜீ5தமிழ் ரசிகர்களுக்கு ஒரு நினைவில் நிற்கும் அனுபவமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பை உருவாகியுள்ளது. கதையின் விவரங்கள் இன்னும் முழுமையாக வெளியிடப்படாத நிலையில், தற்போது வெளியிடப்பட்டுள்ள போஸ்டர் இப்படம் காவல்துறை பின்னணியில் ஒரு அழுத்தமான திரில்லராக இருக்கும் ஆவலைத் தூண்டுகிறது. தமிழ் ரசிகர்கள் ஒரு புதிய பயணத்திற்கு தயாராகுங்கள். சமுத்திரகனி நடிப்பில் "தடயம்" – விரைவில் ஜீ5ல் வெளியாக உள்ளது.

# உலகக் கோப்பை தொடரிலிருந்து விலகினால்...பாகிஸ்தான் அணிக்கு ஐசிசி எச்சரிக்கை



இந்தியாவில் நடைபெறவுள்ள டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரிலிருந்து வங்காளதேச அணி அதிகாரப்பூர்வமாக வெளியேற்றப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களை முன்னிறுத்தி வங்காளதேசம் தொடரைப் புறக்கணித்த நிலையில், அவர்களுக்குப் பதிலாக ஸ்காட்லாந்து அணி உலகக்கோப்பையில் சேர்க்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) அறிவித்துள்ளது.

இந்த நிலையில், டி20 உலகக் கோப்பை போட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ள வங்காளதேசத்துக்கு, பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் ஆதரவு கரம் நீட்டியுள்ளது. இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவர் மொசின் நக்வி நேற்று கூறுகையில், '20 ஓவர் உலகக் கோப்பை போட்டியில் பாகிஸ்தான் அணி விளையாடுமா? இல்லையா? என்பது குறித்து அரசே இறுதி முடிவு எடுக்கும். என்றார்.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணிக்கு ஐசிசி எச்சரிக்கை விடுத்துள்ளது. டி20 உலக கோப்பை தொடரில் இருந்து விலகினால் பாகிஸ்தானுக்கு பல்வேறு தடைகள் விதிக்கப்படும் என ஐசிசி எச்சரித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

எந்தவொரு அணியுடனும் இருதரப்பு போட்டிகள் விளையாட முடியாது, பிஎஸ்எல் தொடரில் விளையாட வெளிநாட்டு வீரர்களுக்கு தடையில்லா சான்று (NOC) வழங்கப்படாது, ஆசியக் கோப்பை தொடரில் விளையாட தடை விதிக்கப்படும் என ஐசிசி எச்சரித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

# பிக்பாஷ் லீக் இறுதிப்போட்டி : சிட்னி அணிக்கு எதிராக பெர்த் பந்துவீச்சு தேர்வு



பிக்பாஷ் லீக் தொடரின் இறுதிப்போட்டி பெர்த்தில் நடைபெற்று வருகிறது. இதில் சிட்னி சிக்சர்ஸ் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணிகள் மோதுகின்றன. இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது.

அதில் டாஸ் வென்ற பெர்த் அணியின் கேப்டன் ஆஷ்டன் டர்னர் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி சிட்னி அணி முதலில் பேட்டிங் செய்து வருகிறது.

சிட்னி சிக்ஸர்ஸ்:

ஸ்டீவன் ஸ்மித், டேனியல் ஹியூஸ், ஜோஷ் பிலிப், மொய்சஸ் ஹென்ரிக்ஸ் , லாச்லன் ஷா, ஜாக் எட்வர்ட்ஸ், ஜோயல் டேவிஸ், பென் மனென்டி, பென் டுவார்ஷுயிஸ், சீன் அபோட், மிட்செல் ஸ்டார்க்

பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் :

மிட்செல் மார்ஷ், ஃபின் ஆலன், ஆரோன் ஹார்டி, ஜோஷ் இங்கிலிஸ், கூப்பர் கோனொலி, ஆஷ்டன் டர்னர், லாரி எவன்ஸ், ஜெய் ரிச்சர்ட்சன், பிராடி கோச், டேவிட் பெய்ன், மஹ்லி பியர்ட்மேன்

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி : இந்திய மகளிர் அணி அறிவிப்பு



இந்திய மகளிர் கிரிக்கெட் அணி பிப்ரவரி 15ந் தேதி முதல் மார்ச் 9ந் தேதி வரை ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து மூன்று டி20, 3 ஒருநாள் போட்டி மற்றும் ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது. இந்தியாஆஸ்திரேலியா மகளிர் அணிகள் இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பெர்த்தில் மார்ச் 6ந் தேதி முதல் 9ந் தேதி வரை நடக்கிறது.

இந்த டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்திய அணி:

ஹர்மன்பிரீத் கவுர் (கேப்டன்), ஸ்மிர்தி மந்தனா (துணை கேப்டன்), ஷபாலி வர்மா, ஜெமிமா ரோட்ரிக்ஸ், அமன்ஜோத் கவுர், ரிச்சா கோஷ், உமா சேத்ரி, பிரதிகா ராவல், ஹர்லீன் தியோல், தீப்தி ஷர்மா, ரேணுகா சிங், சினே ராணா, கிராந்தி கவுட், வைஷ்ணவி ஷர்மா, சயாலி சத்ஹாரே.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066